2010 ஏப்ரல் 20]

மதுராந்தகம் வழியாக காஞ்சிபுரம், மேல்மருவத்தூர் செல்வதற்கு பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இதனால், பணம் மற்றும் காலநேரம் வீணாகிறது. ஆகவே, காஞ்சிபுரத்திலிருந்து உத்திரமேரூர், எண்டத்தூர் வழியாக மேல்மருவத்தூருக்கும் அரசு பேருந்துகளை இயக்கவேண்டும். அதுபோல் அந்த மக்களுடைய கோரிக்கையைப் பரிசீலித்து, காஞ்சிபுரம்-திருவண்ணாமலைக்கும் இந்தப் பேருந்துகளை இயக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தெந்தப் பகுதிகளுக்குப் பேருந்துகள் வேண்டுமென்ற கடிதத்தை கையிலே வைத்திருக்கிறார்கள்? அதை ஒரு மனுவாக எழுதித் தருவார்களேயானால், அதிகாரிகளை ஆய்வு செய்யச் சொல்லி எங்கே உடனடியாகத் தேவையோ, எங்கே மக்களுடைய அடர்வு அதிகமாக இருக்குமோ அந்தப் பகுதிகளிலே பேருந்துகளை இயக்கலாம். 29 ஆம் தேதி நடைபெறவிருக்கும் போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கையின் பதிலுரையில் மேலும் இதைப்பற்றி அதிகமான விவரங்கள் இருக்கின்றன. அதில் அவருக்கு எந்தெந்த வழித்தடங்களிலே பேருந்துகள் இயக்கப்படும் என்பதை விவரமாக அறிவிக்கிறோம்.

முற்பகல் 9-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 64, மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. இராஜேந்திரன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

64—

கால்நடை மருத்துவமனை

***70090—திரு. சபா. இராஜேந்திரன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2010 ஏப்ரல் 20

(அ) நெல்லிக்குப்பம் தொகுதி, அண்ணா கிராம ஒன்றியம், சாத்திப்பட்டு கிராமத்தில் புதிய கால்நடை மருத்துவமனை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) நெல்லிக்குப்பம் தொகுதி, அண்ணா கிராம ஒன்றியத்தைச் சார்ந்த சாத்திப்பட்டு கிராமத்தில் புதியதாகக் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த தற்போது சாத்தியக்கூறு ஏதுமில்லை.

(ஆ) கேள்வி எழாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. இராஜேந்திரன்.*

திரு. சபா. இராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லிக்குப்பம் தொகுதி, அண்ணா கிராம ஒன்றியம், சாத்திப்பட்டு ஊராட்சியில், ஏழாயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகளும், அதைச் சுற்றியுள்ள குக்கிராமங்களில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகளும் வளர்க்கப்படுகின்றன. அந்தப் பகுதியில் கோழிப்பண்ணைகளும் உள்ளன. விவசாயத்திற்கு அடுத்தபடியாக கால்நடை வளர்ப்பையே நம்பியிருக்கின்ற அந்தப் பகுதி மக்கள், கால்நடைகளுக்கு நோய்கள் வருகின்றபோது, 6 கிலோ மீட்டர் அல்லது 7 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள காடாம்புலியூர் பகுதிக்கு அழைத்துச் செல்லவேண்டிய சூழ்நிலையில் இருக்கிறார்கள். கால்நடைத் துறையினரும் ஒரு மருத்துவமனை தேவை என்று பரிந்துரை செய்திருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, ஒரு கிளை நிலையமோ அல்லது கால்நடை மருந்தகமோ அமைத்துத் தர முன்வருவார்களா என்று தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

2010 ஏப்ரல் 20]

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்புத் துறை, அந்தந்தப் பகுதிகளில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கையைப் பொறுத்து, அப்பகுதியில் கால்நடை கிளை நிலையம் மற்றும் கால்நடை மருந்தகம், மருத்துவமனை போன்றவற்றை அமைத்துத் தருகிறது. ஒரு கிராமத்தில் கால்நடைகளின் எண்ணிக்கை மூவாயிரத்திற்கும் மேல் இருக்குமானால், அங்கு ஒரு கால்நடை கிளை நிலையமும், பத்தாயிரத்திற்கும் மேல் இருப்பின் அங்கு கால்நடை மருந்தகமும் அமைத்துத் தரப்படுகிறது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஊரான சாத்திப்பட்டு கிராமத்தில் பசு 364-ம், எருமைகள் 21-ம், வெள்ளாடு 65-ம், கோழிகள் குறைவாகவும், மொத்தம் 450 அலகுகளே உள்ளன. ஆகவே, இங்கு சாத்தியக்கூறுகள் குறைவாக இருக்கின்றன. அருகில் இருக்கின்ற சி.என். பாளையத்தில் கால்நடை மருந்தகமும், பத்திரக்கோட்டையில் கால்நடை கிளை நிலையமும் அமைந்துள்ளது. அங்கே சென்று கால்நடைகளுக்கு உரிய சிகிச்சைகளை பெற்றுக்கொள்ளுமாறு கோரப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. இராஜேந்திரன்.

திரு. சபா. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு வந்திருக்கின்ற தகவல் கொஞ்சம் சரியாக இல்லை என்று நினைக்கின்றேன். சாத்திப்பட்டு கிராமத்தில் மட்டுமே நிச்சயமாக ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகள் இருக்கின்றன. குக்கிராமங்களில் இன்னும் அதிகமாக இருக்கின்றன. எனவே, அந்தப் பகுதியானது முந்திரி விவசாயத்தை நம்பியிருக்கின்ற பகுதியாகும். அது ஒரு seasonal crop. அந்தப் பகுதியில் மே, ஜுன் மாதங்களில் முந்திரி அறுவடை முடிந்துவிட்ட பிறகு, வருடத்தில் 9 மாதங்கள் அந்தப் பகுதியைச் சார்ந்த மக்கள், கால்நடை வளர்ப்பைத்தான் நம்பியிருக்கிறார்கள். எனவே, அந்தப் பகுதியில் குறைந்தபட்சம் ஒரு கிளை நிலையமோ அல்லது கால்நடை மருந்தகமோ அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவசியம் முன்வரவேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தகவல்கள் உண்மையாக இருக்கும்பட்சத்தில், அவற்றை இன்றே ஆராய்ந்து, நாளை நடக்கவிருக்கின்ற எனது மானியக் கோரிக்கையில், ஒரு நல்ல பதிலை எதிர்பார்க்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 65, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

65—

மாணவர் விடுதி

***59523**—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராதாபுரம் வட்டம், இடையான்குடியில் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் நல விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ராதாபுரம் வட்டம், இடையான்குடியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி தொடங்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட அயர்லாந்தில் பிறந்து, இலண்டனில் படித்து, இந்தியாவிற்கு வந்து, ராதாபுரம் வட்டம், இடையான்குடியில் தமிழுக்காக தொண்டாற்றிய ஐயா கால்டுவெல் அவர்கள் வாழ்ந்து மறைந்த